MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. SRI KANNIAMMAL BLUE METALS, ROUGH STONE AND GRAVEL QUARRY OVER AN EXTENT OF 3.38.58 HA AT S.F.NOS. 162/1, 162/2A, 162/2B, 162/3, 162/4, 162/5A, 162/5B, 162/6, 162/7, 162/8, 162/10A1, 162/10A2, 162/10A3A & 162/10A3B OF KUNDIYANTHANDALAM VILLAGE AND 117/12A2, 144/1A, 144/2 OF POONAITHANGAL VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT ON 27.02.2026 AT 11.00 AM AT M/S. R.S.E MAHAL, MAMANDUR, POONGAVANA KUMARASAMY NAGAR, KANCHIPURAM TO VANDAVASI ROAD, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.

Present:

1	Selvi.L. Ambica Jain I.A.S.,	:	Sub Collector, Cheyyar division Tiruvannamalai. (Representative of the District Collector, Tiruvannamalai)
2	Er. A. Jothi Prakash	:	District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
3	Dr. S. Sugashini	:	Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
4	Er. K. Prem Kumar	:	Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
5	Thiru. M. Tamilmani	:	Tahsildar, Vembakkam Taluk, Tiruvannamalai.
6	Thiru.K. Vijayaraghavan	:	Environmental Impact Assessment (EIA) Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri.
7	Public	:	128 Nos. (Attendance enclosed as Annexure).

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, welcomed the Sub Collector, Cheyyar division, Tiruvannamalai, the general public, Revenue officials, Police department officials, Media persons and the proprietor of M/s. Sri Kanniammal Blue Metals, Rough Stone and Gravel Quarry

who had assembled for the public hearing in connection with obtaining Environmental Clearance for the proposed Rough Stone and Gravel Quarry of M/s. Sri Kanniammal Blue Metals. He further pointed out that prior notification regarding the conduct of this public hearing had already been published on 22.01.2026 in the Tamil and English daily newspapers, namely “Dinamalar” and “The New Indian Express.” He also informed that public announcements had been made in and around Kundiyanthandalam Village & Poonaithangal Village through loudspeakers and distribution of pamphlets.

He further stated that, on behalf of the proponent of the proposed Rough Stone and Gravel Quarry project, their project consultant would present a detailed explanation of the project to the public, following which the public may given their views, suggestions, doubts, and seek clarifications regarding the project, and that all such event would be video graphed and audio recorded, and the minutes and records of this meeting would be forwarded to the State Environment Impact Assessment Authority-Tamil Nadu (SEIAA-TN).

The Sub Collector, Cheyyar division, inaugurated the public hearing meeting and requested M/s. Sri Kanniammal Blue Metals, the proprietor of the proposed Rough Stone and Gravel Quarry, to present the detailed explanation regarding the proposed quarry project.

Thiru. K. Vijayaraghavan, Environmental Impact Assessment Consultant of M/s. Sri Kanniammal Blue Metals Rough Stone and Gravel Quarry project from M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri, welcomed all those who had assembled for the public hearing meeting and delivered a detailed power point presentation explaining the operational aspects of the Rough Stone and Gravel Quarry project and the Environmental Management Plan to be implemented during its operation.

Following the above presentation, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, announced that the public may express their views. He further requested that, before recording their views, the public should mention their name and their village name, before expressing their

opinions

Accordingly, the following public expressed their views and suggestions.

1. Thiru. Muthu, Former Village Panchayat President, Kundiyanthandalam Village:

Thiru. Muthu stated that he conveys his morning greetings to the District Collector, the District Environmental Officer, and the Vembakkam Tahsildar, who have come to grant permission for the newly proposed stone and gravel quarry by Tvl. Sri Kanniyamman Blue Metals in Kundiyanthandalam Village Panchayat. He stated that since this quarry is being established in Kundiyanthandalam Village Panchayat, he conveys that no kind of harm will be caused to the people of this Panchayat. He stated that the mineral fund obtained from this quarry is being utilized by the Panchayat Presidents to implement various schemes. Through this, several schemes such as overhead water storage tanks, sewage drains, cement concrete drains, etc., can be implemented. Therefore, he stated that on behalf of the general public of the Panchayat, there is no objection to the establishment of this quarry in the village and concluded his statement.

2. Thiru. Raja, Panchayat President, Kundiyanthandalam Village:

Thiru. Raja stated that he welcomed the District Collector, the Environmental Engineer, the Tahsildar of Vembakkam, and all others who had assembled on behalf of the village public for the establishment of Kanniyamman Blue Metals. He stated that due to the quarry operations, a sum of Rs. 7 crores has been provided to the village under the Mineral Fund during the past five years. He mentioned that he had personally worked on several of the works executed under this fund. In particular, school buildings, Anganwadi centres, Panchayat buildings, tar roads, cement roads, and several other infrastructure facilities have been developed through the Mineral Fund. He further stated that necessary measures have been taken to prevent pollution and ensure the safety of all residents. The project has also generated significant employment opportunities for the local people. Therefore, he expressed that there is no objection from their side for the establishment of this

project in the village.

.3. Thiru. Kamalakkannan, Branch Secretary, All India Anna Dravida Munnetra Kazhagam, Kundiyanthandalam Village:

Thiru. Kamalakkannan conveyed his general greetings to the Sub-Collector who had come to grant Government licence to Tvl. Sri Kanniyamman Blue Metals stone quarry in the village, to the Pollution Control Board Officer, to the Tahsildar, and to all the members of the public from the surrounding areas and from the village who were present. He stated that the funds received from granting licence to the said Kanniyamman Blue Metals quarry have been utilized for carrying out several works in the village, including the construction of school buildings. He further stated that previously the village pond was renovated and the Mariamman Temple pond of the village was also renovated. He stated that similarly, the village would continue to progress. He informed that there is no objection from their side for the establishment of the said quarry.

4. Thiru. Ilangovan, Panchayat Ward Member, Kundiyanthandalam Village:

Thiru. Ilangovan stated that they have no objection to the establishment of Tvl. Sri Kanniyamman Quarry in their village.

5. Thiru. Suriya, Kundiyanthandalam Village:

Thiru. Suriya stated that all the villagers have attended the meeting requesting that permission be granted to Sri Kanniyamman Quarry. He informed that the establishment of the quarry in their village does not cause any objection to them. He stated that the quarry owner is investing and carrying out the business, and they have no issue with that. However, he expressed that their main concern is the excessive dust on the roads while travelling to college, school, and work. He mentioned that this issue had already been raised in the previous meeting He said that you are doing business and investing; we have no problem with that., but the roads used by them are fully covered with dust. Due to this, small children, college students, and working individuals are facing difficulties in commuting. He requested

that regular water sprinkling be carried out on the roads to control dust, which would be beneficial to them. He further stated that dust pollution is causing health issues, leading to situations where people have to visit hospitals for treatment. Hence, he requested that necessary action be taken to rectify this issue. He also pointed out that only a portion of the road leading to Chinna Ezhai Cheri has been laid, and the remaining stretch has not been completed. If that road is fully laid, the hospital can be reached within 10 minutes; however, at present, it takes more than 30 minutes. Therefore, he requested that the remaining portion of the road also be constructed. Further, he stated that it was previously assured that employment would be provided to 21 youths from their village. However, the earlier permit holder provided employment to only 7 persons from the village. He requested that employment be provided to the remaining eligible persons as well. He concluded by stating that if all the above requests are fulfilled, they have no objection to the establishment of the quarry.

6. Thiru. Murugan, Tiruvannamalai North District Technical Wing, AIADMK, Poonaithangal Village:

Thiru. Murugan conveyed his greetings to the Sub-Collector and the District Environmental Engineer who had attended the meeting. He requested that, in accordance with the Environment (Protection) Act, 1986, water sprinkling should be done twice daily to ensure environmental protection for the public. He stated that more than one thousand children are studying in their village and that heavy vehicles are frequently operating in the area. Therefore, he requested that heavy vehicles should be driven slowly. He further requested that, as stipulated under the law, the environment should be protected and improved in such a manner that no harm is caused to the people of their village. He stated that he has no objection to the establishment of Kanniyamman Blue Metals Company at this location.

7. Tmt. Sulakshana Kundiyanthandalam Village:

Tmt. Sulakshana conveyed her greetings to the Sub-Collector, the District Environmental Engineer, and the elders present in the meeting. She stated that

while environmental protection is being emphasized, the issue of livelihood and income for the local people has not been addressed. She expressed that the income generated from the quarry is limited to a few individuals and requested that employment be provided to at least one person from each family. She further stated that providing employment to only seven persons would not support the remaining families and requested that equal livelihood opportunities be ensured. She also requested that Rs.1,000 be provided to each family ration card holder so as to support all families with some form of income, stating that such assistance would not cause any loss to the authorities. She stated that her voice might sound a little loud and requested that it should not be taken in the wrong manner. (As some persons interrupted during the meeting), she questioned why she was being asked to come if she was not allowed to speak? She stated that she had completed M.A. in Economics and therefore had the right to express her views. She further stated that she had been invited to the meeting to present her requests and that she had come to seek Government assistance for her present situation. She mentioned that while she had spoken on behalf of others, she was also presenting her own concerns and requests. She requested that the Government provide assistance under the present circumstances. She also stated that the establishment of the Kanniyamman Quarry would not cause any harm. She concluded by thanking the authorities for providing her the opportunity to speak.

8. Thiru. Sunil Kumar, Kundiyanthandalam Village:

Thiru. Sunil Kumar stated that there are 12 quarries and 7 crushers operating in their village; however, no basic amenities have been provided. He informed that there are around 500 voters in the village, of whom more than 300 are elderly persons. He further stated that there is no transport facility in the village. When officials are approached in this regard, they respond that due to heavy vehicle movement in the area, the roads are not in proper condition. He questioned how elderly persons would travel, as only the youth are able to use motor vehicles. He also stated that there is no proper drinking water facility in the village. He mentioned that around 100 people from their village have attended the present meeting. He

expressed that although their village has the highest number of quarries in the surrounding area, no adequate facilities have been provided. He stated that when blasting operations are carried out in the quarries, houses vibrate, causing fear among elderly residents. He clarified that there is no objection to the establishment of the quarry; however, it must be operated in a proper manner. He pointed out that overloading of stones by heavy vehicles results in road damage. He stated that the only request to the quarry owner is that while many are earning income, no benefits are being extended to the village. Though quarry owners earn profits, no basic facilities have been provided to the village. At the time of obtaining quarry permission, assurances are given that facilities will be provided, but such assurances have not been fulfilled. He reiterated that although about 12 quarries are functioning in the village, basic amenities have not been ensured. The drinking water supply is inadequate. An RO system was installed, but it is not properly maintained, and residents have to go to Arpakkam village to fetch drinking water. He further stated that there is no bus facility. When enquiries are made at the bus depot, it is stated that bus services will be provided only after the roads are repaired. He expressed concern regarding elderly persons aged 50–60 years who are unable to travel like the youth who use two-wheelers. He also stated that even to reach the burial ground, one has to pass through the quarry area, making access difficult. Grazing of goats and cattle has become impossible, as previously green areas have now been converted into stone quarries. He stated that while they are not objecting to the quarry owners earning income, the village must also benefit. He requested that employment opportunities be increased and priority be given to the people of their village. He also requested that employment opportunities be provided to women.

9. Tmt. Thilagam, Kundiyanthandalam Village:

Tmt. Thilagam conveyed her greetings. She stated that when a stone quarry is established, excavation is carried out beyond the permitted depth. She stated that there is no drinking water available in their village and that they are drinking only saline water. She further stated that groups of three or four persons are collect

money, and go along with young boys to consume liquor and roam around the streets. She mentioned that this situation is spoiling the village. She requested that Rs.1,000 and one bag of rice should be provided every month for each family ration card for their livelihood. She also stated that after giving their house lands for the quarry, a sum of Rs.3,000 is being collected for one lorry load of sand. Therefore, she requested that the amount should be distributed equally among everyone and should not be given to a single person.

After that, no representation continued from the public for providing comments.

As no members of the public came forward to continue expressing their views, the Sub Collector, Cheyyar Division, Tiruvannamalai, directed that the public hearing meeting be concluded, and accordingly, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai declared that the public hearing meeting had concluded.

Furthermore, regarding the proposed M/s. Sri Kanniammal Blue Metals Rough Stone and Gravel Quarry Project, a total of 11 written petitions were received from the public, while no petitions were received directly or via email at the office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

A. Jothiprakash 6/3/26
District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Tiruvannamalai.

6/3/26
Sub Collector,
Cheyyar Division,
Tiruvannamalai.

District Collector,
Tiruvannamalai.

உத்தேசிக்கப்பட்ட தி/ள். ஸ்ரீ கன்னியம்மாள் புளூ மெட்டல்ஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்கள். 162/1, 162/2A, 162/2B, 162/3, 162/4, 162/5A, 162/5B, 162/6, 162/7, 162/8, 162/10A1, 162/10A2, 162/10A3A & 162/10A3B, குண்டியாந்தண்டலம் கிராமம் மற்றும் 117/12A2, 144/1A, 144/2 பூனைத்தாங்கல் கிராமம், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 3.38.58 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 27.02.2026 அன்று மாமண்டூர், பூங்காவன குமாரசாமி நகர், காஞ்சிபுரம் – வந்தவாசி சாலை, வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். R.S.E மஹாலில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

1	செல்வி.ல.அம்பிகா ஜெயின் இ.ஆ.ப,	:	சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை. (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி)
2	திரு. அ. ஜோதி பிரகாஷ்	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
3	முனைவர். சி. சுகாஷினி	:	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
4	திரு. க. பிரேம் குமார்	:	உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
5	திரு. மு. தமிழ்மணி	:	வட்டாட்சியர், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை.
7	திரு. K. விஜயராகவன்	:	சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஜியோ டெக்னிகல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி.
8	பொதுமக்கள்	:	128 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

தி/ள். ஸ்ரீ கன்னியம்மாள் புளூ மெட்டல்ஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை, பொதுமக்கள், வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிகை நண்பர்கள் மற்றும் தி/ள். ஸ்ரீ கன்னியம்மாள் புளூ மெட்டல்ஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 22.01.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், குண்டியாந்தண்டலம் கிராம சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை தெரிவிக்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்து,

உத்தேசிக்கப்பட்டுள்ள (தி/ள். ஸ்ரீ கன்னியம்மாள் புளூ மெட்டல்ஸ்), சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அவர்களை விளக்கவுரையை வழங்க அழைத்தார்.

தி/ள். ஸ்ரீ கன்னியம்மாள் புளூ மெட்டல்ஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. விஜயராகவன், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

1. திரு. முத்து, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், குண்டியாந்தண்டலம் கிராமம்:

திரு. முத்து அவர்கள் கூறுகையில், குண்டியாந்தண்டலம் ஊராட்சியில் தி/ள். ஸ்ரீ கன்னியம்மன் புளூ மெட்டல்ஸ் நிறுவனம் புதியதாக கல் மற்றும் கிராவல் வெட்டி எடுக்க அனுமதி வழங்க வந்துள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் அவர்களுக்கும் மற்றும் வெம்பாக்கம் வட்டாட்சியர் அவர்களுக்கும் தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார். இக்குவாரி குண்டியாந்தண்டலம் ஊராட்சியில் அமைவதால், இந்த

ஊராட்சி மக்களுக்கு எந்தவித தீங்கும் ஏற்படாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார். இக்குவாரியால் கிடைக்கும் கனிமவள நிதியை ஊராட்சி மன்ற தலைவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்துகின்றனர். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கழிவுநீர் கால்வாய், சிமெண்ட் கால்வாய் போன்ற பல திட்டங்களை செயல்படுத்த முடியும். எனவே, இக்குவாரி ஊரில் அமைவதில் ஊராட்சி பொதுமக்கள் சார்பாக எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை தெரிவித்து விடைபெறுகிறேன் எனக் கூறினார்.

2. திரு. ராஜா, ஊராட்சி மன்ற தலைவர், குண்டியாந்தண்டலம் கிராமம்:

திரு. ராஜா அவர்கள் கூறுகையில், இக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள ஆட்சியர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், வெம்பாக்கம் வட்டாட்சியர் அவர்களுக்கும் மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பாக இந்த கன்னியம்மன் ப்ளூ மெட்டல்ஸ் நிறுவனம் அமைய வந்திருக்கும் அனைவரையும் வரவேற்கிறேன். குவாரி வருவதினால் நம் கிராமத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 7 கோடி கனிமவள நிதி வழங்கப்பட்டுள்ளது. அதில் பல பணிகளில் நானே வேலை பார்த்து இருக்கிறேன். குறிப்பாக பள்ளி கட்டிடங்கள், அங்கன்வாடி மையங்கள், ஊராட்சி கட்டிடங்கள், தார் சாலைகள், சிமெண்டு சாலைகள் போன்ற பல வசதிகள் இந்த கனிமவள நிதியிலிருந்து செய்ய வசதியாக உள்ளது. மாசு இல்லாமல் நம்மை அனைவரையும் பாதுகாப்பாக வைத்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம் ஊர் மக்களுக்கு நிறைய வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. எனவே, இத்திட்டம் இங்கு வருவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

3. திரு. கமலக்கண்ணன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கிளைக்கழக செயலாளர். குண்டியாந்தண்டலம் கிராமம்:.

திரு. கமலக்கண்ணன் அவர்கள் கூறுகையில், எங்கள் கிராமத்தில் தி/எ். ஸ்ரீ கன்னியம்மன் புளூ மெட்டல்ஸ் கல்குவாரிக்கு அரசு உரிமம் வழங்க வருகை தந்துள்ள சார் ஆட்சியர் அவர்களே, மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர் அவர்களே, வட்டாட்சியர் அவர்களே, சுற்றுவட்டாரத்திலிருந்து மற்றும் எங்கள் ஊரிலிருந்து வந்திருக்கும் அனைத்து கிராம பொதுமக்களே அனைவருக்கும் என் பொதுவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கன்னியம்மன் புளூ மெட்டல் குவாரிக்கு உரிமம் வழங்குவதால் வரும் நிதியை கொண்டு நம் ஊர் பள்ளிக் கட்டிடங்கள் போன்ற பல பணிகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த முறை குளம் சீரமைக்கப்பட்டுள்ளது, நம்ம ஊர் மாரியம்மன் கோயில் குளம் சீரமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த ஊர் முன்னேற்றம் அடையும். எனவே, இந்த குவாரி வருவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. திரு. இளங்கோவன், ஊராட்சி வார்டு உறுப்பினர், குண்டியாந்தண்டலம் கிராமம்:

திரு. இளங்கோவன் அவர்கள் கூறுகையில், தி/எ். ஸ்ரீ கன்னியம்மன் குவாரி எங்கள் ஊரில் அமைப்பதற்கு எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

5. திரு. சூரியா, குண்டியாந்தண்டலம் கிராமம்:

திரு. சூர்யா அவர்கள் கூறுகையில், ஸ்ரீ கன்னியம்மன் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு ஊர் பொதுமக்கள் அனைவரும் இக்கூட்டத்திற்கு வருகை தந்துள்ளனர் என தெரிவித்தார். குவாரி எங்கள் ஊரில் அமைவதால் எங்களுக்கு எந்தவித பிரச்சனையும் இல்லை. குவாரி உரிமையாளர் முதலீடு செய்து தொழில் செய்து வருகிறார்; அதனால் எங்களுக்கு பிரச்சனை இல்லை. எங்களின் பிரச்சனை

என்னவென்றால், நாங்கள் கல்லூரி, பள்ளி மற்றும் வேலைக்கு செல்லும் போது சாலைகளில் தூசி அதிகமாக உள்ளது. கடந்த கூட்டத்திலும் இதை தெரிவித்திருந்தேன். நீங்கள் தொழில் செய்து முதலீடு செய்கிறீர்கள்; அதில் எங்களுக்கு பிரச்சனை இல்லை. ஆனால் நாங்கள் செல்லும் சாலைகள் முழுவதும் தூசியால் மூடப்பட்டுள்ளன. சிறிய குழந்தைகள், கல்லூரி மாணவர்கள் மற்றும் வேலைக்கு செல்லுபவர்கள் செல்ல முடியாமல் சிரமப்படுகின்றனர். சாலைகளில் முறையாக தண்ணீர் தெளித்தால் எங்களுக்கு நன்றாக இருக்கும். தூசி காரணமாக மாசு ஏற்பட்டு உடல்நலப் பிரச்சனைகள் உருவாகின்றன; இதனால் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. எனவே, இதனை சரி செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டார். மேலும், சின்ன ஏழைசேரி செல்லும் சாலையில் ஒரு பகுதி வரை மட்டுமே சாலை அமைக்கப்பட்டுள்ளது; அதன் பின்னர் சாலை அமைக்கப்படவில்லை. அந்த சாலை வழியாக சென்றால் மருத்துவமனைக்கு 10 நிமிடங்களில் சென்றுவிடலாம்; தற்போது 30 நிமிடங்களுக்கு மேல் ஆகிறது. எனவே, மீதமுள்ள சாலையையும் அமைத்து தர வேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும், நம் ஊர் இளைஞர்களில் 21 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம் என்று முன்பு கூறியிருந்தனர். இதற்கு முன் அனுமதி பெற்றவர் எங்கள் ஊரிலிருந்து 7 பேருக்கு மட்டுமே வேலை வழங்கியுள்ளார். மீதமுள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். மேற்கண்ட கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டால், எங்களுக்கு குவாரி அமைவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

6. திரு. முருகன், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தொழில்நுட்ப பிரிவு, AIADMK பூனைத்தாங்கல் கிராமம்:

திரு. முருகன் அவர்கள் கூறுகையில், இக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், 1986ன் படி

மக்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தினமும் இரு வேளை தண்ணீர் தெளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். எங்கள் ஊரில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் படித்து வருகின்றனர். கனரக வாகனங்கள் செல்வதை நாங்கள் பார்க்கிறோம். எனவே, கனரக வாகனங்களை மெதுவாக இயக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும், சட்டத்தில் கூறியுள்ளபடி எங்கள் ஊர் மக்களுக்கு எந்தவித தீங்கும் விளைவிக்காத வகையில் சுற்றுச்சூழலை பாதுகாத்து மேம்படுத்தி தர வேண்டும் என கேட்டுக் கொண்டார். இக்கன்னியம்மன் புளூ மெட்டல்ஸ் நிறுவனம் இங்கு அமைவதில் தனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

7. திருமதி. சுலோச்சனா, குண்டியாந்தண்டலம் கிராமம்:

திருமதி. சுலக்சனா அவர்கள் கூறுகையில், இக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் மற்றும் பெரியோர்களுக்கும் தனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார். சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்கள்; ஆனால் அடுத்தவர்களின் பிழைப்பிற்கான வருமானம் குறித்து கூறவில்லை என தெரிவித்தார். குவாரியிலிருந்து வரும் வருமானம் சிலருக்கே செல்கிறது. எனவே, ஒவ்வொரு குடும்பத்திலும் தலா ஒரு நபருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் எனக் கோரினார். 7 பேருக்கு மட்டும் வேலை வழங்குவோம் என்று கூறினால், மற்ற குடும்பங்கள் எப்படி பிழைப்பார்கள் என வினவினார். மேலும், ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் தலா ரூ.1000 வழங்க வேண்டும் என்றும், இவ்வாறு உள்ள அனைவருக்கும் வருமானம் கிடைக்கும் வகையில் அத்தனை பேருக்கும் பிழைப்பதற்கான வழியை ஏற்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். இதனால் உங்களுக்குப் பாதிப்பு எதுவும் இல்லை என தெரிவித்தார். தனது குரல் கொஞ்சம் அதிகமாகக் கேட்கலாம்; அதை தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும் கூறினார். (கூட்டத்தில் சிலர் குறுக்கிட்டதால்) ஏன் வரச் சொல்கிறீர்கள், பேசினால் என்ன? நான் பொருளாதாரத்தில் முதுகலைபட்டம் படித்தவர்; எனக்கு

பேச உரிமை இருக்கிறது. ஏன் "வா, வா" என்று சொல்கிறீர்கள்? என்ன கோரிக்கை இருக்கிறது என்று கேட்பதற்குத்தானே வரச் சொன்னார்கள்? தற்போது எனக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்; அதை கேட்கவே வந்தேன். அடுத்தவர்களுக்காக சொன்னதால் நீங்கள் "வா, வா" என்று கேட்கிறீர்கள். என்னைப் பற்றியும் எனக்காகவும் கேட்கிறேன். தற்போதைய நிலையில் எனக்கு அரசாங்க உதவி செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இந்த கன்னியம்மன் குவாரி வருவதால் எந்தவித பாதிப்பும் இல்லை என தெரிவித்து, எனக்கு வாய்ப்பளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

8. திரு. சுனில் குமார், குண்டியாந்தண்டலம் கிராமம்:

திரு. சுனில் குமார் அவர்கள் கூறுகையில், எங்கள் ஊரில் 12 குவாரிகளும் 7 கிரஷர்களும் உள்ளன; ஆனால் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை என தெரிவித்தார். எங்கள் ஊரில் சுமார் 500 நபர்கள் வாக்குரிமை கொண்டுள்ளனர்; அதில் 300க்கும் மேற்பட்டோர் முதியவர்கள் ஆவர். மேலும், எங்கள் ஊரில் போக்குவரத்து வசதி இல்லை. இதனை தொடர்பாக அதிகாரிகளை அணுகினால், உங்கள் ஊரில் அதிகமான போக்குவரத்து காரணமாக சாலைகள் சரியில்லை என்று கூறுகின்றனர். இளைஞர்கள் மோட்டார் வாகனங்களில் செல்கின்றனர்; ஆனால் முதியவர்கள் எவ்வாறு செல்ல முடியும்? என வினவினார். மேலும், எங்கள் ஊரில் குடிநீர் வசதி இல்லை. இப்போது வந்து கேட்கிறார்கள்; எங்கள் ஊரிலிருந்து 100 பேர் வந்துள்ளோம். அனைவரும் கீழே இருந்தார்கள்; இப்போதுதான் மேலே வந்தார்கள். கிராமத்தின் சுற்றுவட்டாரப் பகுதியில் எங்கள் ஊரில்தான் அதிக குவாரிகள் உள்ளன; ஆனால் நல்ல வசதிகள் எதுவும் இல்லை. குவாரியில் வெடி வைத்தால் வீடுகள் அதிர்கின்றன; இதனால் முதியவர்கள் மிகவும் அச்சமாக இருக்கிறார்கள்.. இந்த குவாரி வருவதில் ஆட்சேபனை இல்லை; ஆனால் சரியான முறையில் நடத்த வேண்டும். அளவுக்கு அதிகமாக கற்களை ஏற்றி செல்வதால் சாலைகள் சேதமடைகின்றன. குவாரி உரிமையாளரிடம் ஒன்று மட்டுமே கேட்டுக் கொள்கிறோம்; இங்கு அனைவரும் பணம் பெற்றுக் கொள்கிறார்கள், ஆனால்

ஊருக்கு நல்லது எதுவும் செய்ய மறுக்கிறார்கள். குவாரி உரிமையாளர்கள் சம்பாதிக்கிறார்கள்; ஆனால் எங்கள் ஊருக்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்யவில்லை. குவாரி அனுமதி பெறும் போது நாங்களும் வந்து கேட்டு தான் போகிறோம்; "செய்கிறோம்" என்கிறார்கள், ஆனால் அடிப்படை வசதிகள் செய்வதில்லை. எங்கள் ஊரில் சுமார் 12 குவாரிகள் அமைந்துள்ளன; ஆனால் அடிப்படை வசதிகள் வழங்கப்படவில்லை. எங்கள் ஊரில் குடிநீர் சரியாக இல்லை. ஆர்.ஓ (RO) குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பு ஒன்று அமைத்தார்கள்; அதுவும் சரியாக பராமரிக்கப்படவில்லை. மக்கள் எங்கள் ஊரிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள ஆர்ப்பாக்கம் கிராமத்திற்கு சென்று தான் தண்ணீர் எடுத்து வருகின்றனர். எங்களுக்கு பேருந்து வசதி இல்லை. பேருந்து பணிமனையில் கேட்டால், "உங்கள் சாலைகள் சரியில்லை; சாலை சரி செய்த பின்னர் பேருந்து விடுகிறோம்" என்கிறார்கள். 50–60 வயதுக்குட்பட்ட முதியவர்கள் இருக்கிறார்கள். இளைஞர்கள் இருசக்கர வாகனங்களில் சென்று விடுகிறார்கள்; முதியவர்கள் எப்படி செல்வார்கள்? சுடுகாட்டிற்கு செல்ல வேண்டுமானாலும் குவாரியைத் தாண்டி தான் செல்ல வேண்டும்; இதனால் அப்பகுதிக்கு செல்ல முடியாமல் இருக்கிறது. ஆடு மற்றும் மாடுகள் மேய முடியவில்லை. பசுமையாக இருந்த அனைத்து இடங்களும் தற்போது கல்குவாரிகளாக மாற்றப்பட்டுள்ளன. எங்கள் ஊருக்கு என்னதான் அடிப்படை வசதிகள் செய்யலாம் என இருக்கிறார்கள். நீங்கள் சம்பாதிக்கலாம்; சம்பாதிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஊருக்கு என்ன நல்லது செய்கிறீர்கள்? ஊருக்கு நல்லது நடக்கவில்லை. வாய் உள்ளவர்கள் பிழைத்துக் கொள்கிறார்கள்; வாய் இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்? ஊருக்கு நல்லது செய்யுங்கள். நீங்கள் சம்பாதிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. எங்கள் ஊருக்கு வேலைவாய்ப்புகளை அதிகரித்து தர வேண்டும். எங்கள் ஊர் மக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். பெண்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

9. திருமதி. திலகம், குண்டியாந்தண்டலம் கிராமம்:

திருமதி. திலகம் அவர்கள் கூறுகையில், வணக்கம் தெரிவித்தார். கல்குவாரி அமைத்தால் அனுமதிக்கப்பட்ட ஆழத்தை விட அதிகமான ஆழத்தில் தோண்டுகின்றனர் என்றார். எங்கள் ஊரில் குடிக்க தண்ணீர் இல்லை; உப்பு தண்ணீரையே குடித்து வருகிறோம் என்றார். மேலும், "கல்குவாரிக்கு போகிறோம்" என்று கூறி மூன்று அல்லது நான்கு பேர் காசு வாங்கிக்கொண்டு, சிறுவர்களுடன் சென்று சாராயம் குடித்து தெருவில் அலைந்து திரிகிறார்கள் என்றும் தெரிவித்தார். இதனால் ஊர் கெட்டுப் போகிறது என்றார். எங்களுக்கு பிழைப்பதற்காக ஒவ்வொரு மாதமும் குடும்ப அட்டை ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயும், ஒரு அரிசி மூட்டையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், எங்கள் வீட்டு நிலங்களை உங்களுக்கு தந்துவிட்டு ஒரு வண்டி மணலுக்கு மூன்றாயிரம் ரூபாய் வாங்குகிறீர்கள் என்றார். எனவே, அனைவருக்கும் சமமாகப் பிரித்து கொடுக்க வேண்டும்; ஒரே நபர் கையில் கொடுக்கக் கூடாது என்று தெரிவித்தார்.

அதன் பின்னர், பொதுமக்கள் தரப்பில் இருந்து கருத்து தெரிவிக்க யாரும் முன்வரவில்லை.

பொது மக்கள் தொடர்ந்து கருத்துக்களை தெரிவிக்க முன் வராததால் சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தினை நிறைவுசெய்திட கூறியதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஸ்ரீ கன்னியம்மாள் புளு மெட்டல்ஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 11 மனுக்கள் பெறப்பட்டுள்ளது, மின்னஞ்சல் மூலமாகவும் மற்றும் நேரடியாகவும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு

மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

A. Jothiprakash 6/3/26
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை.

6/3/26
சார் ஆட்சியர்,
செய்யாறு கோட்டம்,
திருவண்ணாமலை.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை.